அன்பே சிவம்! உ. சிவமே சகலமும் !!


அருள்மிகு அருணாசலேஸ்வரர் துணை

திருவண்ணாமலை

# ஸ்ரீ தண்டபாணி ஆஸ்ரம வாலைச்சித்தர் அறக்கட்டளை

வழங்கும்

# இலவச ஜோதிடப் பயிற்சி







## பாடம் - 1


**ஸ்ரீ தண்டபாணி ஆஸ்ரமம்**

மலை ஏறும் வழி, முலைப்பால் தீர்த்தம் அருகில்,

திருவண்ணாமலை – 606 601.

**Mobile & WhatsApp : 9894803009,**

**Ph : 04175 - 227893**

**e-mail : dhandapaniashram@yahoo.co.in**

**Website : www.valaisiddar.com**

உ

ஸ்ரீ அருணாசலேஸ்வரர் துணை



## விநாயகர் துதி

அல்லல்போம் மல்வினைபோம் அன்னை வயிற்றில்
பிறந்த தொல்லைபோம் போம்போக துயரம்போம்
நல்ல குணமதிக – மாமருணைக் கோபுரத்துள் வீற்றிருக்கும்
செல்வக் கணபதியைக் கைதொழுதக்கால்.



## ஸ்ரீ குருபகவான் ஸ்லோகம்

குரூர் பிரம்மா குரூர் விஷ்ணு
குரூர் தேவோ மஹேஸ்வரஹ
குரு ஹாக்ஷாத் பரப்பிரம்மா
தஸ்மை ஸ்ரீ குரவே நமஹ:



<u>வாழ்த்துரை</u>

ஆன்மிக ரத்னா "நற்சேவை செம்மல்"
T.P.**அன்னமராஜா** இராஜபாளையம்
தமிழ் மாநில தலைவர்
அகில இந்திய வாலைச்சித்தர் ஆன்மிக பேரவை
திருவண்ணாமலை.

அன்பார்ந்த ஜோதிட மாணவர்களே...

வணக்கத்துடன்... வாழ்த்துரை வழங்குவதில் பெருமையும், பெருமகிழ்ச்சியும் அடைகிறேன். ஜோதிடம் என்பது முக்காலத்தையும் உணர்த்தும் தெய்வீக கலையாகும். ஆயர் கலைகள் அறுபத்து நான்கில் முதன்மையாக விளங்கும் ஜோதிடக் கலையின் பிறப்பிடம் நமது பாரத பூமியே என்பதில் நமக்கெல்லாம் பெருமையே! அதை விட பெருமை நமது ஜோதிடக் கலையை வெளிநாட்டவரும் பின்பற்றி வருவது! இப்படிப்பட்ட அரிய கலையை நமது சித்தர்கள், ரிஷிகள், முனிவர்கள் யாவரும் ஆராய்ந்து நமக்கு அளித்திருப்பது மனித குலம் மேம்படத்தான்! எனவே, தாங்கள் இக்கலையை நன்கு பயின்று மனித குலத்திற்கு பயனுள்ள வகையில் செய்ய வேண்டுமென்றும், தாங்கள் ஜோதிட மாணவராக மட்டுமல்லாமல் நமது "**அகில இந்திய வாலைச்சித்தர் ஆன்மிக பேரவையின்**" உறுப்பினராகவும் இணைந்து ஆன்மிக சேவை புரிந்திட வேண்டு மென்றும் அன்புடன் கேட்டுக் கொள்கிறேன். இக்கலையை இலவசமாக பயிலும் அனைத்து மாணவ மாணவிகளுக்கும் என் நெஞ்சம் நிறைந்த வாழ்த்துக்களை வழங்குகிறேன்.

திருவண்ணாமலை, ஸ்ரீ தண்டபாணி ஆஸ்ரம வாலைச்சித்தர் அறக்கட்டளை சார்பில் இலவசமாக வழங்க பெருமுயற்சி மேற்கொண்டு வரும் "ஜோதிடரத்னா" "ஆன்மிக செம்மல்" Dr. L.**சீனுவாசன்** அவர்களின் முயற்சி மாபெரும் வெற்றி அடையவும் என் மனமார்ந்த வாழ்த்துக்களை வழங்குகிறேன். எல்லாவற்றிற்கும் மேலாக இந்த அறிய வாய்ப்பை அளித்த எல்லாம் வல்ல **இறைவனுக்கும்,** பிரம்மரிஷி, **வாலைச்சித்தர்** ஐயா அவர்களுக்கும் என் நன்றிகளை காணிக்கையாக்குகிறேன்.

அன்புடன் உங்கள்

தேதி : 14-04-2019 T.P.**அன்னமராஜா**

இடம் : இராஜபாளையம்

உ



"ஜோதிட ரத்னா" "ஆன்மிக செம்மல்"
Dr. L.**சீனுவாசன்** M.A., D.A., S.M.P.,
நிறுவனர் & செயலாளர்,
ஸ்ரீ தண்டபாணி ஆஸ்ரம வாலைச்சித்தர் அறக்கட்டளை
அகில இந்திய பொதுச் செயலாளர்,
அகில இந்திய வாலைச்சித்தர் ஆன்மீக பேரவை
திருவண்ணாமலை.

அன்பிற்கினிய ஆன்மீக அன்பர்களே......

வணக்கம்! தாங்கள் வாலைச்சித்தர் குருகுலத்தில் இலவசமாக ஜோதிடப் பயிற்சி பெறும் மாணவர்களாக சேர்ந்து இருப்பதில் மிகவும் மகிழ்ச்சி அடைகிறோம். இந்த இலவச ஜோதிடப் பயிற்சி வகுப்பானது 2019-ஆம் ஆண்டில் முதல் கட்ட வகுப்பாகும். இந்த ஜோதிடக் கலை பயிற்சி பெற மிகுந்த ஆர்வத்துடன் ஆயிரக்கணக்கான மாணவர்களிடமிருந்து விண்ணப்பங்கள் எங்களுக்கு வந்து குவிந்த வண்ணம் உள்ளதைக் கண்டு மேலும் நாங்கள் ஊக்கம் கொண்டு எங்கள் நன்றியையும் தெரிவித்துக் கொள்கிறோம். இந்த ஜோதிடப் பயிற்சியை எங்களால் முடிந்த அளவு மிகமிக எளிமையாக எல்லோருக்கும் புரியும் வண்ணம் தர முயற்சி செய்கிறோம். பாடங்களில் ஏதேனும் சந்தேகங்கள் இருப்பின் ஒரு நோட்டு புத்தகத்தில் குறித்து வைத்துக் கொண்டு வருடத்திற்கு இரண்டு நாட்கள் நடைபெற உள்ள இலவச நேர்முக பயிற்சியின் போது சந்தேகங்களை தீர்த்துக் கொள்ளுங்கள். முதல் நேர்முக வகுப்பானது திருவண்ணாமலையில் நடைபெறும்.

ஏட்டுச்சுரக்காய் கறிக்கு உதவாது என்பார்கள்... என்னத்தான் பல புத்தகங்களை படித்து அறிவை வளர்த்துக் கொண்டாலும். காதால் கேட்கும் அறிவுக்கு ஈடாகாது. ஜோதிடக் கலையைப் பொறுத்த வரை குரு இல்லாக் கல்வி மிகவும் சிரமமாகும். எனவே மாணவர்களே நீங்கள் முடிந்தவரை நேர்முக பயிற்சியில் (2-நாள் செமினார்) கலந்து கொள்ள முயற்சி

செய்யுங்கள். நான் கற்றது கை மண் அளவு தான்... எங்கள் குருவான **ஸ்ரீ சதானந்த யோகீஸ்வரரிடமிருந்து** நாங்கள் கற்றதையும், எங்கள் அனுபவங்களையும் உங்களுக்கு நேர்முக பயிற்சியில் மட்டுமே விரிவாக விளக்க முடியும். எனவே இந்த அறிய வாய்ப்பை நழுவவிடாதீர்கள். திருவண்ணாமலை மற்றும் உங்கள் பகுதியில் நடைபெற இருக்கும் நேர்முக பயிற்சியில் கலந்து கொள்ளும் மாணவ மாணவிகள் நேர்முக பயிற்சி (செமினார்) நடைபெறுவது பற்றி அவ்வப்போது தங்களுக்கு கடிதம் மூலம் தெரிவிக்கப்படும். மாணவ மாணவிகள் நேர்முக பயிற்சியில் கலந்து கொள்ள விரும்பினால் கடிதம் மூலம் தெரிவித்தல் வேண்டும்.

ஜோதிடப் பாடங்களை அறிவதற்கு முன் நம் மாணவர்கள் அனைவரும் ஒரே மாதிரியான பஞ்சாங்கம் வாங்க வேண்டும். ஒரே மாதிரியான பஞ்சாங்கத்தைப் பயன்படுத்தினால்தான் பாடங்கள் பயில முடியும். எனவே, மாணவர்கள் அனைவரும் கடலூரிலிருந்து வெளியிடப்படும் நவீன 108. நெ கர வருஷ திருக்கோயில் அனுஷ்டமான வாக்ய பஞ்சாங்கம் ஒன்றை புதியதாக (2019-2020) வாங்கிக் கொள்ளுமாறு அன்புடன் கேட்டுக் கொள்கிறோம். உங்கள் ஊரில் இந்த பஞ்சாங்கம் கிடைக்கவில்லை எனில் பஞ்சாங்கத்தின் விலை ரூ.200/-ம் (கொரியர் கட்டணம் உட்பட) மணியார்டர், **NEFT** (அ) **Paytm** மூலம் எங்களுக்கு அனுப்பினால் நாங்கள் வாங்கி அனுப்புகிறோம். மணியார்டர் பாரத்தில் பஞ்சாங்கத்திற்காக ரூ.200/- அனுப்பப்படுகிறது என்பதை மறவாமல் குறிப்பிட வேண்டும்.

"நம்பினோர் கெடுவதில்லை" என்பது உங்களுக்குத் தெரியும். எதை நம்பினோர் கெடுவதில்லை என்ற கேள்வி எழும். நம்பக் கூடாததை நம்பினால் கெடாமல் என்ன செய்வார்கள்? நம்பக் கூடியதை நம்பினால் தான் நலம் பிறக்கும். நம்பக் கூடாததை நம்பாமலும், நம்பக் கூடியதை நம்பத் தவறாமலும் இருக்க வேண்டும்.

**இறைவன்**-நம்பிக்கைக்குரிய மூலப் பொருள்-**தாய், தந்தை, குரு**-நம்பிக்கைக்குரிய கண்கண்ட தெய்வங்கள். சத்தியம்-நம்ப வேண்டிய அடிப்படைப் பொருள். தரும பலன் புண்ணியம் தரும் என்று இதை நம்ப வேண்டும். இவற்றின் மீது நம்பிக்கை இருந்தால் ஏனைய நல்ல அம்சங்களின் மீதும் தானாகவே நம்பிக்கை ஏற்பட்டு விடும்.

நம்பிக்கையில் முழுமையான ஈடுபாடு வேண்டும். அவ்வண்ணம் முழுமை இருந்தால்தான் முழுமையான பலன் கிடைக்கும்.

**கிரகங்கள்** நம் நம்பிக்கைக்கு உரியவை. எந்தக் கிரகத்தையும் நம்பிக்கையோடு ஆராதிக்க வேண்டும். விதிப்படிதானே எல்லாம் நடக்கும், கிரகங்களை நம்பி என்ன ஆகிவிடப் போகிறது என்று சிலர் கேட்கலாம். இங்கேதான் ஆழ்ந்த சிந்தனை வேண்டும். விதிப்படிதான் நடக்கும் என்று சாப்பிடாமல் இருக்கிறோமா? பசிக்கு உணவு தேவை என்று உணருகிறோம்! அதே போன்று இறப்பு தடுக்க முடியாதது என்று அறிந்தும், அதற்காக வாழ்க்கையை வெறுத்து ஒதுக்குகிறோமா என்ன...?

நடக்கப் போவதை எதிர்பார்த்துக் கொண்டே நிகழ்காலத்தை இயக்கிக் கொண்டு போகிற ஆற்றலைப் பெற வேண்டும். அதற்கு வழிகாட்டுவது உண்மை உணர்வுதான். உண்மையில் நம்பிக்கைக் கொண்டால் செயலில் செழிப்பு ஏற்படும்.

நம்மை ஆள்வது நவ நாயகர்கள், ஒவ்வொரு கிரகமும் தெய்வ தூதர். நாம் நல்வழிபட்டு, நம்பிக்கைக் கொண்டு, நேர்மையுடன் நடந்தால் நம்மை ஆளும் அந்த நாயகர்கள் நம் வினைதனைப் பார்த்து, விளைவுகளில் நன்மையைச் செய்ய முன் வருவார்கள்.

முறையீடு என்பது பயன் தரும் ஒன்று. முறையீட்டால் பலன் கிடைக்கும் என்பதில் அசைக்க முடியாத நம்பிக்கை வேண்டும். முறையிடுவது என்பது சுலபம் என்றாலும், அந்த முறையீட்டில் நியாயம் வேண்டும். முறையிடுவோரிடம் நேர்மை வேண்டும்.

நம்முடைய செயல்களில் கிரக வழிபாடு அவசியமே! இறைவனைப் பூசிக்க கோயிலுக்குச் செல்கிறோம். இடையில் குருக்களோ, பூசாரியோ ஒருவர் இருக்கிறாரே! அவர்கள் மூலம்தானே காரியங்கள் நிறைவேறுகின்றன. அதே போன்ற அதிக ஆற்றல் உள்ள இக்கிரகங்கள் நமக்குத் துணை புரிகின்றன. நம் விதியின் தாக்குதல்களைத் தணித்துக் கொள்ள கிரக வழிபாடு உதவுகிறது.

நம்பிக்கையோடு சூரியனை வழிபட்டால் ஆன்மீக பலம் உண்டாகும்.

சந்திரனை வழிபட்டால் புத்திபலம் ஏற்படும்.

செவ்வாயை வழிபட்டால் போராடும் பலம் ஏற்படும்.

குருவை வழிபட்டால் தார்மீக பலம் உண்டாகும்.

சுக்கிரனை வழிபட்டால் சுபயோக பலம் உண்டாகும்.

சனீசுவரனை வழிபட்டால் வினைகளை வெல்லும் பலம் ஏற்படும்.

ராகு–கேது கிரகங்களை வழிபட்டால் கியாதியும்–ஞானமும் விருத்தியாகும்.

வழிபாடு என்பதை வழிப்படுதல் என்று கொள்ள வேண்டும். நல்வழிப் படுகிறோம் என்று அவர்களிடம் உத்தரவாதம் அளிக்க வேண்டும்.

இதனால் ஒன்று நமக்கு ஏற்படும் தீமைகள் அழிய வேண்டும். அல்லது அத்தீமைகளைத் தாங்கிக் கொள்ளும் மனோபலம் ஏற்பட வேண்டும். நன்மையும் – தீமையும், மகிழ்ச்சியும் – துன்பமும் மனதின் செயல்தானே!

உங்களின் சொந்த ஜாதகச் சக்கரத்தை, உங்கள் வாழ்க்கைச் சக்கரத்தின் அஸ்திவாரமாகக் கருதுங்கள். நவ நாயகர்களால் சுழற்றப்படும் அந்தச் சக்கரத்தின் சுழற்சியிலேயே நீங்களும் சுழல்கிறீர்கள். உங்களைச் சார்ந்தவர்களையும் சுழற்றுவிக்கிறீர்கள். இந்த நவ நாயகர்களில் யார் முதல்வரோ, அவருடைய கட்டளைப் படிதான் நீங்கள் மட்டுமல்ல – மற்ற கிரகங்களும் இயங்கியாக வேண்டும்.

உங்கள் ஜாதகத்தில் எந்த கிரகத்தின் நாயகர் எல்லா நிலைகளிலும் பலம் பெற்றிருக்கின்றாரோ, அவர் தான் உங்களுக்கு நவ நாயகர்களின் தலைநாயகர் ஆவார்.

நீங்கள் பிறந்த லக்னத்திற்கு யார் அதிபதியோ, அவரே லக்னாதிபதியாவார். அவர் தான் உங்களுக்கு தாய் போன்றவர்.

லக்கனத்தின் அதிபதி பெற்றுள்ள பலமே உங்களை உயர்ந்த நிலைக்குக் கொண்டு போய் சேர்க்கும் தகுதியைப் பெறும்.

லக்னாதிபதிக்குப் பலம் குறைந்திருந்தாலும், உங்களுக்கு உதவி செய்யும் கடமைப் பொறுப்பு அவருக்கு உண்டு. தாய் நலிவுற்றிருந்தாலும், தன் செல்லக்குழந்தையைக் காக்கும் பொறுப்பைக் கைவிட மாட்டாள் அல்லவா! அதே போல் ராசிக்கு அதிபதியான ராசிநாதன் தந்தை போன்றவர். இவர்கள் இருவரும் ஒவ்வொருவருடைய ஜாதகத்திற்கும் மிக முக்கியமாக கருதப்படுபவர்கள் ஆகும்.

ஜோதிடம் என்பது வேதங்கள் ஆறில் ஒன்றாகும். ஆங்கிலேயர்கள் பின்பற்றும் ஜோதிட சாஸ்திரம் சாயன முறையாகும். அதாவது சூரியனின் சலனத்தைக் கொண்டு மற்ற கிரகங்களின் இருப்பைக் கணிப்பது. நமது இந்திய ஜோதிடம் நிரயன முறை எனப்படும். அதாவது சந்திரனின் சலனத்தைக் கொண்டு கணிப்பதாகும்.

ஒரு குழந்தையை பிறக்கும் போது தாயின் வயிற்றிலிருந்து தலைதான் முதலில் வெளிவருகிறது. அப்படி வெளிவரும்போது கிரகங்களின் கதிர்வீச்சு மற்றும் ஈர்ப்பு விசையானது (Magnetic field) முதலில் தலையில்தான் படுகிறது. இதுவே தலை எழுத்து எனப்படும் ஜாதக அமைப்பாகும். கிரகங்களின் கதிர்வீச்சு மற்றும் ஈர்ப்பு விசையானது அன்றைய நட்சத்திரத்தின் வழியாக குழந்தைக்கு வருகிறது என்று சொல்லப்பட்டாலும் கிரகங்களின் பின்னால்தான் நட்சத்திரங்கள் அமைந்துள்ளது. கிரகங்களின் சக்தியுடன் நட்சத்திரங்களின் சக்தியும் இணைந்துதான் ஒரு குழந்தையின் தலை எழுத்தை நிர்ணயிக்கிறது. சந்திரன் எந்த நட்சத்திரத்தில் சஞ்சரிக்கிறாரோ அதுவே அன்றைய நட்சத்திரமாகும். இதுப் பற்றி பிறகு விரிவாகக் காண்போம்.

“ஜனனி ஜன்ம ஸெக்யானாம் வர்த்தனி குலஸம்பதாம் பதவி பூர்வ புண்யாநாம் லக்யதே ஜந்ம பத்திகா” – என்று ஒவ்வொரு ஜாதகத்திலும் எழுதப்படுகிறது. இந்து மத நம்பிக்கையின்படி ஒரு குழந்தை தன் முற்பிறப்பில் செய்த பாவம், புண்ணியம் இவற்றைத் தழுவியே இப்பிறவியில் அப்பலன்களை அனுபவிக்கப் பிறவி எடுக்கிறது என்பதே இதன் பொருள் ஆகும். இதனால் ஒருவர் விதியின் பிடியிலிருந்து தப்ப முடியாது என்றாலும் “விதியை மதியால் வெல்லலாம்” என்றும் இதே சாஸ்திரம் கூறுகிறது. இங்கு விதி என்பது ஒருவரது “லக்னம்” ஆகும். மதி என்பது வான்மதியான சந்திரன் நிற்கும் “ராசி” ஆகும். மேலும் விதியால் ஏற்படும் ஆயுள், சில கொடிய வியாதி இவற்றை தவிர மற்றவற்றை நமது திடமான நம்பிக்கை, முயற்சி மூலமும் பரிகாரங்கள் மூலமும் ஓரளவுக்கு விதியை மாற்ற முடியும். இந்த ஜோதிடப் பயிற்சியின் நோக்கமும் அதுவே. உங்களது கஷ்ட நஷ்டங்களிலிருந்து நீங்களே தற்காத்து கொள்ளவும், மாற்று ஏற்பாடுகளை தெரிந்து வெற்றி பெறவும் இந்த பயிற்சி கண்டிப்பாக உதவும் என்பதை நாங்கள் மனமார நம்புகிறோம். எல்லாம் வல்ல **இறைவனின்** அருளுடனும், பிரம்மரிஷி. **வாலைச்சித்தர் ஐயா** அவர்களின் ஆசியுடனும் தெய்வீக கலையாம் ஜோதிடக் கலையை கற்போம்...! வாழ்வில் வளம் பெறுவோம்...!

என்னை தொலைபேசி மூலம் தொடர்பு கொள்வோர் வியாழக் கிழமை மட்டும் காலை 10.00 மணி முதல் 2.00 மணி வரை தொடர்பு கொள்ளலாம்.

வாலைச்சித்தர் குருகுலத்தில் உங்களுக்கு அடையாள அட்டையுடன் கூடிய பதிவு எண் தரப்படும். வரும் காலங்களில் இந்தப்பதிவு எண்ணை பயன்படுத்தவும்.

தேதி : 14-04-2019 அன்புடன் உங்கள் ஆசிரியர்

இடம் : திருஅண்ணாமலை Dr. L.**சீனுவாசன்**

Mobile & WhatsApp : **9489344241**

பாடம்-1

# கிரக மண்டலம்

வான் மண்டலத் தொகுதியான “ஸோடியாக்” (Zodiac) தான் ராசி மண்டலம் என்கிறோம். ராசி மண்டலத் தொகுதியானது சூரியனின் பாதையை (தற்கால விஞ்ஞான விதிப்படி பூமியின் பாதையை) ஒட்டி இருபுறமும் 12 ராசிகள் கொண்ட தொகுதிகளாக உள்ளது. அதாவது ஒரு ஆரஞ்சு பழத்தோலை ஸ்பிரிங் போல் வெட்டினால் எப்படியோ அப்படித்தான். உள்ளிருக்கும் பழம் பூமி என்றால் அதை சுற்றி ஸ்பிரிங் போல் வட்ட வடிவில் வெட்டிய தோல்கள் ராசி மண்டலம் ஆகும். பூமியின் பாதை முட்டை வடிவானதால் இந்த மண்டலத் தொகுதியும் முட்டை வடிவமானதே ஆகும். இப்பாதை ஒரு பட்டையாக காணப்படும். பல கோடிக்கணக்கான நட்சத்திரங்கள் இருப்பினும் ஜோதிடத்தில் அறியப்படும் அசுவினி முதல் 27 நட்சத்திரங்கள் இப்பாதையில் அமைந்துள்ளது. இதன் வழியாகவே ஒன்பது கிரகங்களும் சஞ்சரிக்கின்றன. இப்பாதை 360 பாகை கொண்ட ஒரு வட்ட வடிவமான பாதையாக எடுத்துக் கொள்ளப்படுகிறது. இது 12 ராசிகள் அடங்கியது. எனவே ஒவ்வொரு ராசியும் 30 பாகைகளை கொண்டது. பாகை என்றால் என்ன? என்று குழப்பம் வருகிறதா? நாம் எந்த பொருளை வாங்கினாலும் ஒரு அளவு வைக்கிறோம். கிராம், கிலோ என்பது போன்று தூரத்திற்கும் மீட்டர், கிலோ மீட்டர் என்று சொல்கிறோம்! இது போன்றுதான் பாகை என்பதும் ஒரு அளவு. இது கிரகங்கள் இருக்குமிடத்தை கண்டறிவதற்கு பயன்படுகிறது. உதாரணமாக நீங்கள் வெளியூர் சென்று கொண்டு இருக்கும் போது உங்கள் நண்பர் நீங்கள் எங்கு இருக்கிறீர்கள் என்று செல்போனில் கேட்கும் போது நான் நமது உள்ளூரிலிருந்து 10 கிலோ மீட்டர் தொலைவில் இருக்கிறேன் என்று சொல்கிறீர்கள் அல்லவா அதுப் போலத்தான் இதுவும். 10 கி.மீட்டர் முதல் 15 கி.மீ. வரை ஒரு சின்ன கிராமம் அல்லது ஊர் இருக்கும் அல்லவா? அதன் பெயரையும் சொல்லுவீர்கள். அப்படி அந்த ஊர்தான் ராசி என்று எடுத்துக் கொள்ளுங்கள். அதாவது 10 கி.மீட்டர் தொலைவில் இந்த ஊரில் இருக்கிறேன்

என்பது போல் இந்த பாகையில் இந்த ராசியில் கிரகங்கள் உள்ளன என்பது அர்த்தமாகும். ஒவ்வொரு ராசியின் ஒவ்வொரு பாகையும் மாறுபட்ட குணாதிசயங்களைக் கொண்டது. இப்பாகை தினமும் ஒருமுறை தன்னைத் தானே சுற்றிக் கொண்டு கிழக்கிலிருந்து மேற்காக சுற்றுகிறது. விஞ்ஞானப்படி எல்லா கிரகங்களும் தன்னைத் தானே சுற்றிக் கொண்டு சூரியனை சுற்றி வருகிறது. ஆனால், ஜோதிட சாஸ்திரத்தில் சூரியன் உட்பட ஏழு கிரகங்கள் பூமியை கடிகார முள் போகும் திசையிலும், ராகு, கேது கிரகங்கள் எதிர் திசையிலும் சுற்றுவதாக எடுத்துக் கொள்ளப்படுகிறது. பூமியை விட்டு விலக விலக பாதை தூரம் அதிகமாவதால் கிரகங்கள் சுற்றும் வேகமும் குறைகிறது.

## நக்ஷத்திரங்கள் - ராசிகள்

மாணவர்களே நீங்கள் ஜோதிடக்கலையைப் பற்றி ஆராய்ச்சி செய்வதற்கு முன்பு சில முக்கியமான விஷயங்களை நன்றாகத் தெரிந்து கொள்ள வேண்டும். கணிதத்தைத் தெரிந்து கொள்வதற்குப் பெருக்கல் வாய்ப்பாடு, எடை கணக்கு, கனக்கணக்கு, நாணயமாற்றம் எல்லாம் தெரிந்து கொண்டால் தான் பிற்காலத்தில் கணிதத்தில் நிபுணத்வம் அடைய முடியும், சாதாரண கணக்குகள் போடவும் இது தேவைப்படுகிறது. அதுபோலவே சில முக்கியமான விஷயங்களை நீங்களும் மனப்பாடம் செய்து கொள்ள வேண்டும்.

முதன் முதலாக தமிழ் வருஷங்களின் பெயர்களை மனப்பாடம் செய்துக் கொள்ள வேண்டும். அவையாவன:

| | |
|---|---|
| 1) பிரபவ | 7) ஸ்ரீ முக |
| 2) விபவ | 8) பவ |
| 3) சுக்கில | 9) யுவ |
| 4) பிரமோதூத | 10) தாது |
| 5) பிரஜோத்பத்தி | 11) ஈஸ்வர |
| 6) ஆங்கிரஹ | 12) வெகுதான்ய |

13) பிரமாதி
14) விக்ரம
15) விஷ
16) சித்திரபானு
17) சுபானு
18) தாரண
19) பார்த்திப
20) விய
21) சர்ஜித்து
22) சர்வதாரி
23) விரோதி
24) விக்ருதி
25) கர
26) நந்தன
27) விஜய
28) ஜய
29) மன்மத
30) துர்முகி
31) ஹேவிளம்பி
32) விளம்பி
33) விகாரி
34) சார்வரி
35) பிலவ
36) சுபகிருது
37) சோபகிருது
38) குரோதி
39) விஸ்வாவசு
40) பராபவ
41) பிலவங்க
42) கீலக
43) சௌமிய
44) சாதாரண
45) விரோதி கிருது
46) பரிதாபி
47) பிரமாதீச
48) ஆனந்த
49) இராக்ஷஸ
50) நள
51) பிங்கள
52) காளியுக்தி
53) சித்தாத்திரி
54) ரௌத்திரி
55) துன்மதி
56) துந்துபி
57) ருத்ரோத்காரி
58) ரக்தாக்ஷி
59) குரோதன
60) அக்ஷய

மாணவர்களே, தமிழ் வருடங்களை தெரிந்து கொண்ட பின் பஞ்சாங்கத்தை பற்றி தெரிந்து கொள்வதும் கையாள்வதும் மிகவும் அவசியமாகும். பஞ்சாங்கத்தை வைத்து திருமணம், கிரகப் பிரவேசம், போன்ற பல நற்காரியங்களை செய்ய

நாட்குறிப்பது மட்டுமல்லாமல் ஜாதகம் கணிக்கவும், ஜோதிடப் பலன்கள் சொல்லவும் அத்தியாவசியமானதாக இருக்கிறது. யார் ஒருவர் பஞ்சாங்கத்தை துல்லியமாக பார்க்கிறார்களோ அவர்களால் மட்டுமே ஜோதிடக் கலையில் வெற்றி பெற முடியும்.

பஞ்சாங்கம் என்பது பஞ்ச (ஐந்து) + அங்கம் எனப்படும். அதாவது ஐந்து அங்கங்களை கொண்டது பஞ்சாங்கம் அவை. 1) நாள் (வாரம்), 2) திதி, 3) நட்சத்திரம், 4) யோகம், 5) கரணம்.

(1) <u>நாள் (வாரம்) :</u>

ஏழு நாட்கள் கொண்ட தொகுப்பை வாரம் என்கிறோம். ஒவ்வொரு நாளும் ஒவ்வொரு கிரகத்தின் ஆதிகத்தை உட்பட்டுள்ளது. எனவே, அந்நாளை அக்கிரகத்தின் பெயராலேயே அழைக்கப்படுகிறது.

(1) ஞாயிற்றுக் கிழமை – ஞாயிறு என்பது **சூரியனை** குறிக்கிறது.

(2) திங்கட் கிழமை – திங்கள் என்பது **சந்திரனை** குறிக்கிறது.

(3) செவ்வாய் கிழமை – செவ்வாய் என்பது **செவ்வாய்** கிரகத்தை குறிக்கிறது.

(4) புதன் கிழமை – **புதன்** கிரகத்தை குறிக்கிறது.

(5) வியாழக் கிழமை – வியாழன் என்பது **குரு** வைக் குறிக்கிறது.

(6) வெள்ளிக் கிழமை – வெள்ளி என்பது **சுக்கிரனைக்** குறிக்கிறது.

(7) சனிக் கிழமை – சனி என்பது **சனியைக்** குறிக்கிறது.

ஏழு கிழமைகள் இன்னவையென்று நீங்கள் தெரிந்து கொண்டீர்கள். ஆனால் அவற்றை ஸமஸ்கிருதத்திலும், தெலுங்கிலும் எவ்வாறு அழைக்கிறார்கள் என்பதையும் தெரிந்து கொள்வது நல்லது.

மேலும், கிழமைகளின் தெய்வங்களையும் தெரிந்து கொண்டு வணங்கி வருவது சிறப்பாகும்.

| | | |
|---|---|---|
| ஞாயிறு | – பானுவாரம் | – சிவன் |
| திங்கள் | – சோமவாரம் | – சக்தி |

| | | |
|---|---|---|
| செவ்வாய் | - மங்களவாரம் | - முருகர் |
| புதன் | - புதவாரம் | - விஷ்ணு |
| வியாழன் | - குருவாரம் | - தட்சணாமூர்த்தி |
| வெள்ளி | - சுக்கிரவாரம் | - மகாலட்சுமி |
| சனி | - சனிவாரம் | - ஐயப்பன், ஆஞ்சநேயர் |

(2) <u>திதி</u>

சூரியனுக்கும் சந்திரனுக்கும் உள்ள தூரத்தை திதி என்கிறோம். ஒருவர் இறந்துவிட்டால் திதிப்படி சடங்குகள் செய்கிறோம். ஆனால் ஒருவர் பிறந்தநாளை பிறந்த (ஜென்ம) நட்சத்திரப்படி தான் கொண்டாடுதலும், பூஜைகளும் செய்தல் வேண்டும். நட்சத்திரங்களை பற்றி திதிக்கு பின் காண்போம்.

ஒவ்வொரு நாளும் வரக்கூடிய திதிகளும் மனப்பாடம் ஆக வேண்டும். அவை பதினைந்து:


| | |
|---|---|
| 1) பிரதமை | 9) நவமி |
| 2) த்விதியை | 10) தசமி |
| 3) த்ருதியை | 11) ஏகாதசி |
| 4) சதுர்த்தி | 12) துவாதசி |
| 5) பஞ்சமி | 13) திரயோதசி |
| 6) சஷ்டி | 14) சதுர்த்தசி |
| 7) சப்தமி | 15) அமாவாசை அல்லது பௌர்ணமி |
| 8) அஷ்டமி | |

திதியின் பெயர்களைக் கவனித்தீர்கள் அல்லவா? இது சாதாரணமான விஷயம். 15 நாட்கள் சேர்ந்தது ஒரு பக்ஷம் என்று கூறுகிறார்கள். இந்த பக்ஷத்திற்கு அமாவாசை அல்லது பௌர்ணமியைக் கணக்காக வைத்துக் கொள்ளுகிறார்கள். அமாவாசை அல்லது பௌர்ணமி கழித்து,

| | | |
|---|---|---|
| பிரதமை என்பது | - | முதல்நாள் |
| த்விதியை என்பது | - | இரண்டாம் நாள் |
| த்ருதியை என்பது | - | மூன்றாம் நாள் |
| சதுர்த்தி என்பது | - | நான்காவது நாள் |
| பஞ்சமி என்பது | - | ஐந்தாவது நாள் |

| | | |
|---|---|---|
| சஷ்டி என்பது | - | ஆறாவது நாள் |
| சப்தமி என்பது | - | ஏழாவது நாள் |
| அஷ்டமி என்பது | - | எட்டாவது நாள் |
| நவமி என்பது | - | ஒன்பதாவது நாள் |
| தசமி என்பது | - | பத்தாவது நாள் |
| ஏகாதசி என்பது | - | பதினோறாவது நாள் |
| துவாதசி என்பது | - | பன்னிரண்டாவது நாள் |
| திரயோதசி என்பது | - | பதின்மூன்றாவது நாள் |
| சதுர்த்தசி திதி என்பது | - | பதினான்காவது நாள் |
| அமாவாசை அல்லது பௌர்ணமி | - | பதினைந்தாவது நாள் |

பிரதமை முதல் அமாவாசை வரையில் தேய்பிறையென்றும், பிரதமை முதல் பௌர்ணமி வரையில் வளர்பிறையென்றும் சொல்வார்கள். பௌர்ணமிக்கு முன்னால் வரும் திதிகளுக்கு சுக்கிலபக்ஷம் என்றும், பௌர்ணமிக்குப் பின்னால் வரும் திதிகளுக்கு க்ருஷ்ணபக்ஷம் என்றும் பெயராகும்.



(3) <u>நட்சத்திரங்கள்:</u>

இனி நக்ஷத்திரங்களைக் கவனிப்போம். 27 நட்சத்திரங்களை வரிசைப்படி மனப்பாடம் செய்து கொள்ள வேண்டும். அவையாவன:

1) அஸ்வினி
2) பரணி
3) கார்த்திகை
4) ரோகிணி
5) மிருகசீரிடம்
6) திருவாதிரை
7) புனர்பூசம்
8) பூசம்
9) ஆயில்யம்
10) மகம்
11) பூரம்
12) உத்திரம்
13) ஹஸ்தம்
14) சித்திரை
15) ஸ்வாதி
16) விசாகம்
17) அனுஷம்
18) கேட்டை
19) மூலம்
20) பூராடம்
21) உத்திராடம்
22) திருவோணம்
23) அவிட்டம்
24) சதயம்
25) பூரட்டாதி
26) உத்திரட்டாதி
27) ரேவதி

# நட்சத்திரமும் - நாட்களின் தன்மையும்

## கீழப்பார்வையுள்ள நாள்

அதாவது - அதோமுக நக்ஷத்திரம்

பரணி, கிருத்திகை, ஆயில்யம், மகம், மூலம், விசாகம், பூரம், பூராடம், பூரட்டாதி ஆக ஒன்பது நக்ஷத்திரங்கள். இதில் கிணறு, குளம், தடாக நிர்மிக்க, தேவாலயாரம்பம், பூமியில் நிதிகள் எடுக்க, கணிதம், சோதிடங்கற்க, வரப்புகள் கட்ட குகையில் பிரவேசிக்க உத்தமம். உத்தமம் என்றால் சரியானது என்றும் செய்யலாம் என்றும் பொருள்

## மேல் பார்வையுள்ள நாள்

அதாவது - ஊர்த்துவமுக நக்ஷத்திரம்

ரோகிணி, திருவாதிரை, பூசம், அவிட்டம், திருவோணம், உத்திரம், உத்திராடம், உத்திரட்டாதி, சதயம் ஆக நக்ஷத்திரங்கள் 9; இவற்றில் இராஜ்யாபிஷேகம், பட்டங்கட்ட, யாகங்கள் செய்ய,

வீடு கடைக்கால் போட, மரம், செடிகள் வைக்க, கோபுரம், மதில் மாளிகை கட்ட ஆரம்பித்தல் உத்தமம்.

## சம பார்வையுள்ள நாள்

அதாவது – திரியங்முக நக்ஷத்திரம்

அசுவனி, மிருகசீரிஷம், புனர்பூசம், அஸ்தம், சித்திரை, சுவாதி, அனுஷம், கேட்டை, ரேவதி ஆக நக்ஷத்திரங்கள் 9.

இவற்றில் யானையேற்றம், குதிரையேற்றம், எருமை பசுக்களை வாங்கல், விதை விதைத்தல், பிரயாணம், வியாபாரஞ் செய்தல், படகு செலுத்துதல் இவற்றிற்கு உத்தமம். கருடபுராணாதிகளில் கூறுகின்றது.

## ஸ்திர நக்ஷத்திரம்

ரோகிணி, உத்திரம், உத்திராடம், உத்திரட்டாதி ஆக 4.

இவற்றில் பட்டாபிஷேகம், பட்ட நிர்மாணம், வீடு கட்டல், கிரகப்பிரவேசம், விதை விதைத்தல் உத்தமமென வசிஷ்டர் வசனம்; மாங்கல்யம் செய்தல், விவாகம் செய்தல், வித்தை கற்றல், மருந்துகள் செய்தல், மருந்துண்ணல் உத்தமமென நாரதர் கூறுகிறார்.

## சர நக்ஷத்திரம்

சுவாதி, திருவோணம், புனர்பூசம், அவிட்டம், சதயம் ஆக5.

இவற்றில் வாகனம் செய்தல், ஏறல், அலங்காரம் செய்தல், மந்திரம் கற்றல், பூஞ்சோலைக்கு போதல், வியாபாரஞ் செய்தல் நன்றாம். மற்றும் சங்கு, முத்து இவற்றில் வேலைகள் செய்தல், கரும்பு, வெற்றிலை முதலியவை நடல், கீதம் பயிலல் இவைகளும் செய்யலாம்.

## உக்கிர நக்ஷத்திரம்

பரணி, மகம், பூரம், பூராடம், பூரட்டாதி ஆக 5.

இவற்றில் பந்தனம், போதனம், விஷ வியாபாரம், திருடு, சுராபானம், தாதுவாதம், பவழத்தால் செய்யும் தொழில் இவைகளுக்கு நன்றாம்.

## <u>மிஸ்ர நக்ஷத்திரம் அல்லது சுபாவ நாள்</u>

கிருத்திகை, விசாகம் ஆக 2. இவற்றில் சிற்பம், நாட்டியம், எளிதான காரியங்கள், குரூரமான காரியங்கள், கீதம், பூமி, தானியம் கொள்ள இவைகளுக்கு உத்தமம்.

உத்தமம் என்றால் நன்று என்று பொருளாகும்.

## <u>இலகு நக்ஷத்திரம் அல்லது துரித நாள்</u>

அசுவனி, அஸ்தம், பூசம் ஆக 3.

இதில் மருந்து வியாபாரம், சிற்பம், வித்தியாப்யாசம், யாகம், மங்கள காரியம், வஸ்திராலங்காரம், விருந்துகள் வைக்க, கொடி செடிகளை நாட்ட உத்தமம்.

## <u>மிருது நக்ஷத்திரம்</u>

மிருகசீரிடம், ஆயில்யம், கேட்டை, மூலம் ஆக 4.

இவற்றில் சூளைக்கு நெருப்பிட, மரம் செடி இவைகளை வெட்ட, ஈயம் - இரும்பு - கல், ஆயுதம் இவைகளின் வேலைகள், பொய்யுரைத்தல் இவைகளுக்கு உத்தமம்.

## <u>ஆண் நக்ஷத்திரம்</u>

பரணி, ரோகிணி, புனர்பூசம், பூசம், மகம், அஸ்தம், சித்திரை, விசாகம், திருவோணம், பூரட்டாதி, உத்திரட்டாதி ஆக இந்த 11 நக்ஷத்திரங்கள் புருஷ நக்ஷத்திரமாம்.

## <u>பெண் நக்ஷத்திரம்</u>

அசுவணி, கிருத்திகை, திருவாதிரை, ஆயில்யம், பூரம், உத்திரம், சுவாதி, அனுஷம், கேட்டை, பூராடம், உத்திராடம், அவிட்டம், ரேவதி ஆக இந்த 13 நக்ஷத்திரங்களும் ஸ்திரீ நக்ஷத்திரமாம்.

## <u>அலி நக்ஷத்திரம்</u>

மிருகசீரிடம், மூலம், சதயம் இந்த 3ம் அலி நக்ஷத்திரங்களாகும். இவ்வாறு உமாமகேஸ்வர ஸம்வாதத்தில் சொல்லப்பட்டுள்ளது.

## சவ்விய மற்றும் அபசவ்விய நக்ஷத்திரம்

சவ்வியமென்றால் வலது பாகமாக சஞ்சரிப்பது. இது வலவோட்டு நக்ஷத்திரமெனப் பெயராம்.

அவைகள் அசுவனி, பரணி, கிருத்திகை, புனர்பூசம், பூசம், ஆயில்யம், அஸ்தம், சித்திரை, சுவாதி, மூலம், பூராடம், உத்திராடம், பூரட்டாதி, உத்திரட்டாதி, ரேவதி ஆக 15-ம் சவ்வியம்.

அபசவ்விய மென்றால் இடது பாகமாக சஞ்சரிப்பது. இதற்கு இடவோட்டு நக்ஷத்திரமெனப் பெயராம்.

ரோகிணி, மிருகசீரிடம், திருவாதிரை, மகம், பூரம், உத்திரம், விசாகம், அனுஷம், கேட்டை, திருவோணம், அவிட்டம், சதயம் ஆக 12-ம் அபசவ்வியம்.

### (4) யோகங்கள் :

## யோகங்கள் மூன்று

அமிர்தயோகம், சித்தயோகம், மரணயோகம்.

ஆகாயத்தில் ஒரு குறிப்பிட்ட இடத்திலிருந்து சூரியனும், சந்திரனும் செல்லுகின்ற தூரத்திற்கு பெயர் யோகம் எனப்படும் அவை 27 ஆகும்.

## உபயோகங்கள் 27

| | |
|---|---|
| 1) விஷ்கம்பம் | 15) வச்சிரம் |
| 2) பரீதி | 16) சித்தி |
| 3) ஆயுஸ்மான் | 17) விதிபாதம் |
| 4) சௌபாக்கியம் | 18) வரியான் |
| 5) சொபனம் | 19) பரிகம் |
| 6) அதிகண்டம் | 20) சிவம் |
| 7) சகர்மம் | 21) சித்தம் |
| 8) விஷ்-திருதி | 22) சாத்தியம் |
| 9) பிரி-சூலம் | 23) சுபம் |
| 10) கண்டம் | 24) சுப்ரம் |

| | |
|---|---|
| 11) விருத்தி | 25) பிரமம் |
| 12) துருவம் | 26) மகேந்திரம் |
| 13) வியாகாதம் | 27) வைகிருதி |
| 14) ஹர்ஷணம் | |

## (5) கரணங்கள் :

சூரியனுக்கும், சந்திரனுக்கும் உள்ள தூரத்தை திதி என்கிறோம். அந்த திதியில் பாதி தூரம் கரணம் எனப்படுகிறது. தற்பொழுது கரணத்தை பெரும்பாலனவர்கள் பயன் படுத்துவதில்லை என்றாலும் இதைப்பற்றி தெரிந்து கொள்ளுங்கள்.

### கரணங்கள் 11

| | |
|---|---|
| 1) பவம் | 7) பந்திரை |
| 2) பாலவம் | 8) சகுனி |
| 3) கௌலவம் | 9) சதுஷ் பாதம் |
| 4) தைதுணை | 10) நாகவம் |
| 5) கரசை | 11) கிம்துஷ்ணம் |
| 6) வணிசை | |

### ராசிகள் 12

| | |
|---|---|
| 1) மேஷம் | 7) துலாம் |
| 2) ரிஷபம் | 8) விருச்சிகம் |
| 3) மிதுனம் | 9) தனுசு |
| 4) கடகம் | 10) மகரம் |
| 5) சிம்மம் | 11) கும்பம் |
| 6) கன்னி | 12) மீனம் |

சூரியன் சித்திரை மாதத்தில் மேஷத்தில் சஞ்சரிப்பதால் இதற்கு மேஷ மாசம் என்று பெயர்.

சூரியன் வைகாசி மாதத்தில் ரிஷப ராசியில் சஞ்சரிப்பதால் இதற்கு ரிஷப மாசம் என்று பெயர்.

சூரியன் ஆனி மாதத்தில் மிதுன ராசியில் சஞ்சரிப்பதால் இதற்கு மிதுன மாசம் என்று பெயர்

சூரியன் ஆடி மாதத்தில் கடக ராசியில் சஞ்சரிப்பதால் இதற்கு கடக மாசம் என்று பெயர்.

சூரியன் ஆவணி மாதத்தில் சிம்ம ராசியில் சஞ்சரிப்பதால் இதற்கு சிம்ம மாசம் என்று பெயர்.

சூரியன் புரட்டாசி மாதத்தில் கன்னி ராசியில் சஞ்சரிப்பதால் இதற்கு கன்னி மாசம் என்று பெயர்.

சூரியன் ஐப்பசி மாதத்தில் துலா ராசியில் சஞ்சரிப்பதால் இதற்கு துலா மாசம் என்று பெயர்.

சூரியன் கார்த்திகை மாதத்தில் விருச்சிக ராசியில் சஞ்சரிப்பதால் இதற்கு விருச்சிக மாசம் என்று பெயர்.

சூரியன் மார்கழி மாதத்தில் தனுசு ராசியில் சஞ்சரிப்பதால் இதற்கு தனுசு மாசம் என்று பெயர்.

சூரியன் தை மாதத்தில் மகர ராசியில் சஞ்சரிப்பதால் இதற்கு மகர மாசம் என்று பெயர்.

சூரியன் மாசி மாதத்தில் கும்ப ராசியில் சஞ்சரிப்பதால் இதற்கு கும்ப மாசம் என்று பெயர்.

சூரியன் பங்குனி மாதத்தில் மீன ராசியில் சஞ்சரிப்பதால் இதற்கு மீன மாசம் என்று பெயர்.

## கிரகங்கள் -9

கிரகமென்றால் பிராணமாகிய ஆத்மா. புத்தி அல்லது மனது, பிருதுவி, அப்பு, தேய்வு, வாயு, ஆகாயம் ஆக இந்த ஏழும், இத்துடன் முற்காலத்தில் திருப்பாற்கடலை கடையுங்காலத்திலுண்டான அமிர்தத்தை, தேவர்களுக்கும், இராக்ஷதர்களுக்கும், பாகிக்குங்காலத்தில், விரைவில் அமிர்தத்தைப் பெற உத்தேசித்த ஓர் அரக்கன் சூரிய சந்திரர்களுக்கு மத்தியில் வந்து நிற்க, இதையறிந்து மோகினி ரூபமாகிய மகா விஷ்ணுவானவர், அமிர்தத்தை யொழிந்த பாத்திரத்தை சக்கிராயுதமாக நினைத்துப் பிரயோகஞ் செய்ய, அதனால் தலை வேறு, உடல் வேறாகிய அரக்கன் துதிக்க, உங்கள் சரீரத்தில் அமிர்தம் புகுந்திருப்பதாலும், தலையானது இராகுவாகவும், உடலானது கேதுவாகவும், நீ இந்த

கிரகமண்டலத்தில் ஏழோடு ஒன்பதாக இரண்டு ரூபமாக இருக்கவென்று வரமளித்த காரணத்தால் ஒன்பது கிரகங்களாயிற்று மற்றும்

பரமசிவம், பார்வதி, முருகபெருமான், விஷ்ணு, பிரம்மன், இந்திரன், எமன், பத்திரகாளி, சித்திரகுப்தன் ஆக இவர்கள் 9 பேரும் நவக்கிரகங்களாக உருவெடுத்து, மானிடர்களுக்கும் உலகத்திற்கும் காலகதிகளை நடத்தி, சுபா சுபங்களைத் தருபவர்களாகிறார்கள்.

அவர்கள் யாரெனில் சூரியன்–பரமசிவம், சந்திரன்–பார்வதி, செவ்வாய்–முருகர், புதன்–விஷ்ணு, குரு–பிரம்மன், சுக்கிரன்–இந்திரன், சனி–எமன், இராகு–காளி, கேது–சித்ரகுப்தன் என்பவையே ஆகும்.

## கிரக குணம்

குரூரக்கிரகங்கள் என்றால், கொடியர் அல்லது பாபக் கிரகங்கள் என்று பெயராம்.

அவர்கள் சூரியன், தேய்பிறைச் சந்திரன், செவ்வாய், சனி, இராகு, கேது ஆக இந்த 6 பேர்களாம்.

சௌம்மியக் கிரகங்கள் என்றால் நல்லவர்கள், சுபக்கிரகங்களென்று பெயராம்.

அவர்கள் வளர்பிறைச் சந்திரன், குரு, சுக்கிரன், புதன் ஆக இந்த 4 பேர்களாம்.

## மற்றோர்வித கிரக குணம்

| | |
|---|---|
| சாத்மீகர் என்றால் பொறுமையுள்ளவர்களாம் | சந்திரன், குரு |
| இராஜசர் என்றால் கோபமுள்ளவர்களாம் | சுக்கிரன், செவ்வாய், சூரியன் |
| தாமசர் என்றால் மந்த குணமுள்ளவர்களாம் | சனி, புதன், இராகு,கேது |

## முப்பிணி கிரகங்கள்

| | |
|---|---|
| வாதக்கிரகம் | : குரு, புதன், சனி |
| பித்தக்கிரகம் | : சூரியன், செவ்வாய், ராகு, கேது |
| சிலோத்துமக்கிரகம் | : சுக்கிரன்,சந்திரன் இவைகளே சீதளக் கிரகம். |

## ஆண் பெண் கிரகங்கள்

| | |
|---|---|
| ஆண் கிரகம் | : சூரியன், செவ்வாய், குரு |
| பெண் கிரகம் | : சந்திரன், சுக்கிரன், ராகு |
| அலிக்கிரகம் | : புதன், சனி, கேது. |

## கிரகங்களின் நட்பு அல்லது சிநேகம்

| | |
|---|---|
| சூரியனுக்கு சந்திரன், செவ்வாய் குரு | நட்பு |
| சந்திரனுக்கு சூரியன், புதன் | நட்பு |
| செவ்வாய்க்கு சூரியன், சந்திரன் குரு | நட்பு |
| புதனுக்கு சூரியன், சுக்கிரன் | நட்பு |
| குருவிற்கு சூரியன், சந்திரன், செவ்வாய் | நட்பு |
| சுக்கிரனுக்கு புதன், சனி | நட்பு |
| சனிக்கு புதன், சுக்கிரன் | நட்பு |
| இராகுவிற்கு சுக்கிரன், குரு, சனி | நட்பு |
| கேதுவிற்கு செவ்வாய், சுக்கிரன் | நட்பு |

## கிரகங்களின் பகை அல்லது சத்துரு

| | |
|---|---|
| சூரியனுக்கு சுக்கிரன், சனி, ராகு, கேது | பகை |
| சந்திரனுக்கு பகை கிடையாது, | |
| செவ்வாய்க்கு புதன் | பகை |
| புதனுக்கு சந்திரன் | பகை |
| குருவிற்கு புதன், சுக்கிரன் | பகை |
| சுக்கிரனுக்கு சூரியன், சந்திரன் | பகை |
| சனிக்கு சூரியன், சந்திரன், செவ்வாய் | பகை |
| இராகுவிற்கு சூரியன், சந்திரன் | பகை |
| கேதுவிற்கு சூரியன், சந்திரன் | பகை |

## கிரகங்களின் சமம்

| | |
|---|---|
| சூரியனுக்கு புதன் | சமம் |
| சந்திரனுக்கு குரு, சுக்கிரன், சனி | சமம் |
| செவ்வாய்க்கு சுக்கிரன், சனி | சமம் |
| புதனுக்கு செவ்வாய், குரு, சனி | சமம் |
| குருவிற்கு சனி | சமம் |
| சுக்கிரனுக்கு செவ்வாய், குரு | சமம் |
| சனிக்கு குரு | சமம் |
| இராகுவிற்கு புதன், கேது | சமம் |
| கேதுவிற்கு புதன், குரு, ராகு | சமம் |

## கிரக ஜாதி

| | | |
|---|---|---|
| குரு, சுக்கிரன் | – | பிராமணர் |
| சூரியன், செவ்வாய் | – | க்ஷத்திரியர் |
| சந்திரன்,புதன் | – | வைஸ்யர் |
| சனி | – | சூத்திரர் |
| ராகு, கேது | – | சங்கிரம சாதி |

கிரகங்களிடையே ஜாதி இருப்பது உங்களுக்கு ஆச்சரியமாக இருக்கிறது அல்லவா? ஆனால் இவை சில எளிதான கணிதத்திற்காகவே சொல்லப்பட்டுள்ளது.

## கிரக நிறம்

| | |
|---|---|
| சூரியன் | – பவழ நிறம் |
| சந்திரன் | – வெள்ளை நிறம் |
| செவ்வாய் | – சிகப்பு நிறம் |
| புதன் | – பச்சை நிறம் |
| குரு | – மஞ்சள் நிறம் |
| சுக்கிரன் | – வெண்மை நிறம் |
| சனி | – நீல நிறம் |
| ராகு | – சாம்பல் |

| | |
|---|---|
| கேது | - பலவிதம் |

## கிரக பாஷை

| | |
|---|---|
| சந்திரனுக்கு | - தமிழ் |
| செவ்வாய்க்கு | - தெலுங்கு மந்திரம் |
| புதனுக்கு | - சோதிடம் |
| சனி,ராகு,கேதுவிற்கு | - அன்னிய பாஷை |

மாணவர்களே கிரகங்களின் ஜாதி எப்படியோ அப்படி தான் பாஷைகளும், எளிதான கணிதத்திற்காக கூறப்பட்டுள்ளது.

## கிரக ரத்தினம்

| | | | |
|---|---|---|---|
| சூரியன் | - மாணிக்கம் | சுக்கிரன் | - வைரம் |
| சந்திரன் | - முத்து | சனி | - நீலம் |
| செவ்வாய் | - பவழம் | இராகு | - கோமேதகம் |
| புதன் | - பச்சை | கேது | - வைடூரியம் |
| குரு | - புஷ்பராகம் | | |

## கிரகங்கள் இருக்கும் நிலை அல்லது திசை

| | | | |
|---|---|---|---|
| சூரியன் | - நடுவில் | சுக்கிரன் | - கிழக்கு |
| சந்திரன் | - தென்கிழக்கு | சனி | - மேற்கு |
| செவ்வாய் | - தெற்கு | இராகு | - தென்மேற்கு |
| புதன் | - வடகிழக்கு | கேது | - வடமேற்கு |
| குரு | - வடக்கு | | |

## கிரக தேவதைகள்

| | | | |
|---|---|---|---|
| சூரியன் | - பரமசிவம் | சுக்கிரன் | - இந்திரன் |
| சந்திரன் | - ஈஸ்வரி | சனி | - எமன் |
| செவ்வாய் | - சுப்பிரமணியர் | இராகு | - காளியும்,பாம்பும் |
| புதன் | - மஹாவிஷ்ணு | | |
| குரு | - பிரம்மா | கேது | - சித்திரகுப்தன் |

## கிரக தானியங்கள்

| | | | |
|---|---|---|---|
| சூரியன் | - கோதுமை | சுக்கிரன் | - மொச்சைக் கொட்டை |

| | | | |
|---|---|---|---|
| சந்திரன் | - நெல்லு | சனி | - எள்ளு |
| செவ்வாய் | - துவரை | இராகு | - உளுந்து |
| புதன் | - பச்சைப்பயறு | கேது | - கொள்ளு |
| குரு | - வெண் மூக்குகடலை | | |

## கிரக லோகங்கள்

| | | | |
|---|---|---|---|
| சூரியன் | - தமபாக்கு, சூரியகாந்தம் | சுக்கிரன் | - வெள்ளி |
| சந்திரன் | - ஈயம், சந்திரகாந்தம் | சனி | - இரும்பு |
| செவ்வாய் | - செம்பு | இராகு | - கருங்கல் |
| புதன் | - பித்தளை | கேது | - துருக்கல் |
| குரு | - பொன் | | |

## இராசிகளின் ரூபம் அல்லது உருவம்

| | | | |
|---|---|---|---|
| மேஷம் | - ஆடு | துலாம் | - தராசு |
| ரிஷபம் | - எருது | விருச்சிகம் | - தேள் |
| மிதுனம் | - ஸ்திரீ புருஷன் | தனுசு | - வில் |
| கடகம் | - நண்டு | மகரம் | - முதலை |
| சிம்மம் | - சிங்கம் | கும்பம் | - குடம் |
| கன்னி | - பெண் | மீனம் | - மீன் |

## இராசி நிறங்கள்

| | |
|---|---|
| மேஷம், தனுசு, சிம்மம் | - சிகப்பு |
| ரிஷபம், துலாம், கடகம் | - வெண்மை |
| மிதுனம், கன்னி, மகரம் | - கறுப்பு |
| விருச்சிகம், கும்பம், மீனம் | - பச்சை |

## ஸ்திரீ புருஷ ராசிகள்

மேஷம், மிதுனம், சிம்மம், துலாம், தனுசு, கும்பம் ஆக 6-ம் புருஷ ராசியென்றும், ஒற்றை ராசி என்றும் பெயர்.

ரிஷபம், கடகம், கன்னி, விருச்சிகம், மகரம், மீனம் ஆக 6-ம் ஸ்திரீ ராசியென்றும், இரட்டை ராசியென்றும் பெயர்.

## இராசித் திரயம்

சர ராசிகள் : சரம் என்றால் சஞ்சரிக்கும் ராசிகள்

மேஷம், கடகம், துலாம், மகரம் இவைகள் சரம்

ஸ்திர ராசிகள் : ஸ்திரம் என்றால் நிலைத்திருக்கும் ராசிகள்

ரிஷபம், சிம்மம், விருச்சிகம், கும்பம் இவைகள் ஸ்திரம்

உபய ராசிகள் : உபயமென்றால் நடப்பதும், இருப்பதுமாகிய மேல்கண்ட இரண்டு குணங்களையுடையது. மிதுனம், கன்னி, தனுசு, மீனம் உபயம்.

## இராசி ஜாதிகள்

| | |
|---|---|
| கடகம், விருச்சிகம், மீனம் | – பிராம்மண ஜாதி |
| மேஷம், சிம்மம், தனுசு | – க்ஷத்திரிய ஜாதி |
| மிதுனம், துலாம், கும்பம் | – வைசிய ஜாதி |
| ரிஷபம், கன்னி, மகரம் | – சூத்திர ஜாதி |

மாணவர்களே பாடங்களை புரிந்து படியுங்கள். ஒரே மாதத்தில் அனைத்தையும் கற்பது என்பது கடினமான காரியமாகும். ஏதோ புத்தகம் இலவசமாக அனுப்புகிறார்கள்... என்று அலட்சியப்படுத்தாமல் ஜோதிடக்கலை மீது ஈடுபாடு கொண்டு பயிலுங்கள். புரியவில்லை என்றால்... இந்த பாடம் புரியவில்லை என்று எனக்கு கடிதம் எழுதுங்கள். மேலும் எளிமையாக சொல்லித்தர முயற்சி செய்கிறேன். இலவசமாக புத்தகங்கள் கிடைக்கிறது என்பதற்காக படிக்க வேண்டாம்... இந்த புத்தகங்கள் அனுப்புவதற்கான செலவு, நேரம் மட்டுமல்லாமல் என் எதிர்பார்ப்பையும் தயவு செய்து வீணாக்க வேண்டாம். இந்த கலையை கற்பதிலிருந்து பாதியில் நீங்கள் விலக விரும்பினால் தயவு செய்து நமது அறக்கட்டளைக்கு கடிதம் மூலம் தெரிவிக்கவும்.

நான் எனது மாணவர்களாகிய உங்கள் ஒவ்வொருவரையும் ஜோதிடக் கலை மேதைகளாக்கவே விரும்புகிறேன். இந்த கலை மூலம் நீங்கள் மற்றவர்களுக்கு தொண்டாற்ற வேண்டும் என்றும் விரும்புகிறேன். தாங்கள்

மேதைகளாக ஆகாவிட்டாலும் அடிப்படை ஜோதிட அறிவையாவது வளர்த்துக் கொள்ளுங்கள். உங்கள் வாழ்க்கையை நீங்களே வழிவகுத்துக் கொள்ள பெரிதும் உதவும். "சாஸ்திரம் தெரிந்தவனிடம் சரசம் செய்யாதே" என்று சொல்லுவார்கள். அதாவது, ஜோதிட சாஸ்திரம் தெரிந்தவர்களிடம் வாக்கு வாதம் கூடாது என்று பொருளாகும். கிரகங்களின் நிலை அறிந்து ஒருவன் செயல்பட்டால் அவனை வெற்றி கொள்வது மிகவும் கடினமாகும்... "ஆள் செய்யாததை நாள் செய்யும்" என்பார்கள்... உங்களுக்கு ஏற்ற நாளை, நேரத்தை நீங்களே அறிந்து ஒரு காரியத்தில் ஈடுபட்டால் வெற்றி நிச்சயம் கிடைக்கும். இதை அனுபவமாக கண்ட நான் எல்லாம் வல்ல இறைவனின் அருளாலும், பிரம்மரிஷி. வாலைச்சித்தரின் ஆசியாலும் உங்களுக்கு இதுப் பற்றி பாடங்களில் விளக்கமாக கூற இருக்கிறேன். மீண்டும் அடுத்த மாதம் சந்திப்போம்! வணக்கம்...

அன்புடன் உங்கள் ஆசிரியர்
Dr. L.**சீனுவாசன்**
திருவண்ணாமலை.

**மாணவர்கள் அனைவருக்கும் எங்கள் வாழ்த்துக்கள்**

திரு. Dr.V.**பிரகாசம்** வலைச்சித்தர் ஆன்மிக பேரவை அகில இந்திய மாநில தலைவர் கோவை
திரு. S.**டெல்லிகுமார்** தூக்கணாம்பாக்கம். அறக்கட்டளை தலைவர்
திரு. Lion. M.**பாலகிருஷ்ணன்** தேவக்கோட்டை.
திரு. T.**இராசையா** P.D.மலேசியா.
திரு. S.**இரவிச்சந்திர குருக்கள்** விக்கரவாண்டி, விழுப்புரம் மாவட்டம்.
திரு. E.P.**உமாகாந்த்** தமிழ்மாநில பொருளாளர், எடப்பாடி, சேலம்.
திரு. N.**சந்திரபாபு,** திருவதிகை. தமிழ்மாநில துணை தலைவர்
திரு. P.**செந்தில்குமரன்** திருவண்ணாமலை.

# எந்திரங்கள்

அன்பிற்குரிய ஆன்மீக அன்பர்களே...

வணக்கம், நமது ஆஸ்ரமத்தில் நடைபெறும் மாபெரும் மஹாயாக பூஜைகளில் வைக்கப்பட்டு இலட்சக்கணக்கான மந்திரங்களால் உருவேற்றப்பட்ட எந்திரங்களை பக்தர்களுக்கு வழங்கி வருகிறோம்.3X3 அளவுள்ள இந்த எந்திரங்களை பற்றி கீழே குறிப்பிட்டுள்ளோம். எந்திரங்களை வைத்து பூஜித்து வருவதன் மூலம் பல நன்மைகளை பெறலாம் என்று ஆதிசங்கரர் கூறியுள்ளார்.

1. **ஸ்ரீ குபேர லட்சுமி எந்திரம் :** வியாபாரம் வசியம், தொழி-ல் மேன்மை, நல்ல லாபம் பெறலாம்.
2. **ஸ்ரீ சுப்பிரமணியர் எந்திரம் :** வழக்கில் வெற்றி, மாங்கல்ய பலம், திருமணம் கைகூடும்.
3. **ஸ்ரீ குருபகவான் எந்திரம் :** அனைத்து நன்மைகள், தனம், பொன்பொருள் சேரும். புத்திர சம்பத்து ஏற்படும்.
4. **ஸ்ரீ மஹாம்ருத்யுஞ்சய எந்திரம் :** நோய்நொடி நீங்கவும், பயணம், எதிரி ஆபத்தி-ருந்து காத்து நீண்ட ஆயுளை வழங்கும்.
5. **ஸ்ரீ வாஸ்து எந்திரம் :** வீடு, கடை, தொழிற்கூடம் போன்றவற்றில் நமக்கு தெரியாமல் இருக்கும் வாஸ்து தோஷத்தை போக்கி வளமான வாழ்வை தரும்.
6. **ஸ்ரீ சரஸ்வதி எந்திரம் :** மாணவர்கள் கல்வி கலைகளில் வெற்றி பெற உதவும்.
7. **ஸ்ரீ கண்திருஷ்டி எந்திரம் :** மற்றவர்களின் கண் திருஷ்டியி-ருந்து காக்கும்.

மேற்காணும் பூஜையில் வைக்கப்பட்ட எந்திரங்கள் தேவை எனில் ஒரு எந்திரம் ரூ. 201 /- வீதம் செய்தால் கொரியர் மூலம் அனுப்பப்படும். **இரண்டு எந்திரங்கள் பெற்றால் ஒரு எந்திரம் இலவச அன்பளிப்பாக** வழங்கப்படும். தேவைப்படுவோர் தொகையை மணியார்டர் மூலம் அனுப்பியபின் ஒரு கடிதத்தில் உங்கள் முழு முகவரியையும் தேவைப்படும் எந்திரத்தின் விபரத்தினையும் எழுதி அனுப்பவும். எந்திரம் தபால் / கொரியர் மூலம் அனுப்பி வைக்கப்படும்.



திருவண்ணாமலை ஸ்ரீ தண்டபாணி ஆஸ்ரம வாலைச்சித்தர் அறக்கட்டளை சார்பில் இலவசமாக ஜோதிடக்கலையை பயின்ற மாணவர்களுக்கு பிரம்மரிஷி.**வாலைச்சித்தர்** ஐயா அவர்கள் "**ஜோதிடப்பட்டம்**" அளிக்கிறார்.



ஸ்ரீ தண்டபாணி ஆஸ்ரமத்தில் நடைபெறும் மஹாயாக பூஜை.